**01.09.2024 முதல் 30.11.2024**
**வரை 3 மாதங்களுக்கு**
**சம்பளம் வழங்கும் அதிகாரம்**

பள்ளிக்கல்வித் துறை,
தலைமை செயலகம்,
சென்னை – 600 009.

**கடித (efile) எண்./9003/பக5(1)/2024–1, நாள்.09.10.2024**

அனுப்புநர்
திருமதி. சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசுசெயலாளர்.

10 OCT 2024

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி 2009–2010 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2064 பட்டதாரி ஆசிரியர்கள், 344 உடற்கல்வி ஆசிரியர்கள், 544 ஆய்வக உதவியாளர்கள் மற்றும் 344 இளநிலை உதவியாளர்கள் ஆக மொத்தம் 3296 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது– இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டது– 01.09.2024 முதல் 30.11.2024 வரை மேலும் 3 மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை)எண்.46, பள்ளிக் கல்வித்(சி2)துறை, நாள்.01.03.2011.
2. அரசாணை (நிலை) எண்.67,பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள். 16.03.2012.
3. அரசாணை (1டி) எண். 101, பள்ளிக்கல்வித் 5(1)துறை, நாள்.20.07.2021.
4. பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.000688/எல்/இ3/2021, நாள் 22.04.2024.
5. கடிதம்( e file).எண். 4872/ ப.க5(1)/2024, நாள்.30.05.2024.
6. பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.000688/எல்/இ3/2021, நாள் 11.09.2024.

--------

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் அரசாணைகளில் 2009–2010 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய, அரசு / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை நடுநிலைப் பள்ளிகளுக்கு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2064 பட்டதாரி ஆசிரியர்கள், 344 உடற்கல்வி ஆசிரியர்கள், 544 ஆய்வக உதவியாளர்கள்

மற்றும் 344 இளநிலை உதவியாளர்கள் ஆக மொத்தம் 3296 தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

2. பார்வை 3-ல் காணும் அரசாணையில் மேற்காணும் 3296 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு 01.03.2021 முதல் 29.02.2024 வரை தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பார்வை 4-ல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மூலம் இப்பணியிடங்களுக்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை 3 மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டது.

3. பார்வை 5-இல் காணும் அரசு கடிதத்தில் மேற்காணும் 3296 தற்காலிக ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை 3 மாதங்களுக்கு ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டு முடிவடைந்த நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.09.2024 முதல் 28.02.2025 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேற்குறிப்பிட்டுள்ள 3296 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத தற்காலிக பணியிடங்களுக்கு 01.09.2024 முதல் 30.11.2024 வரை மேலும் 3 மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.09.2024 முதல் 30.11.2024 முடிய 3 மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம், இத்துறையின் மின்கோப்பு எண்.9003/ப.க5(1)/2024, நாள். 08.10.2024- ல் நிதித்துறையிடம் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

10/10/24

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு செயலாளருக்காக

10/10/24

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: இயக்குநரக ந.க.எண்:000688/எல்/இ3/2021. நாள்: 10.10.2024

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது,

இணை இயக்குநர்.

பெறுநர்:-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

10/10/24